# 4B செயல்முறைப் பகுதி

## 1. அற்றிலா எண்டர்: சமநிலை வாய்ப்பு, பல்பண்பாட்டுத் திறன்கள் மற்றும் சனநாயகக் கல்வியில் உருக்காட்டல்கள்

அற்றிலா எண்டர் துருக்கியிலிருந்து வருகிறார். அவர் வியென்னாவில் 33 ஆண்டுகள் வாழ்கிறார், துருக்கிஷ் பா.மொ.க வகுப்புகளில் கற்பிக்கிறார் மற்றும் தன்னிச்சையான பராமரிப்புப் பணியாளராகப் பணிசெய்கிறார்.

குறிப்பிட்ட வகுப்பு அமைப்பு மற்றும் பள்ளிச் சூழல் என்பவற்றில் பெரிதும் தங்கியிருப்பினும், தன்னாட்டு மொழிக் கல்வி ஆசிரியரின் ஒவ்வொரு நாள் பள்ளி வாழ்க்கை மற்றும் ஆசிரியக்கலையின் வெற்றிகள் தோல்விகள் என்னும் பார்வையில், சிலவற்றைப் பொதுமைப்படுத்தலாம், எனினும், நான் மூன்று கருத்துகளுடன் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறேன்.

### சம வாய்ப்பு

சம வாய்ப்பு என்பது பள்ளியின் அன்றாட வாழ்க்கையில் அரிதாகவே உள்ளது. துருக்கியப் பின்னணியில் பெரும்பாலான குடும்பங்கள் குறைந்த வாடகை, சிறிய பழைய குடியிருப்புகளில் வாழ்கின்றனர். இக் குடியிருப்புகளிலே நூல்களையோ இசைக்கருவிகளையோ நான் எப்போதுமே பார்த்ததில்லை. ஆனால் மறுபக்கத்தில், ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு மிகப்பெரிய தொலைக் காட்சித் தொகுப்பு உள்ளது.

பெரும்பாலான பெற்றோர்கள் ஜேர்மன் மொழி பேச மாட்டார்கள் அல்லது போதுமான அளவு பேசமாட்டார்கள். சில விதிவிலக்குகளைத் தவிர, தாய்மார்கள் எல்லோரும் வீட்டுத் தலைவிகளே. அவர்களுடைய ஜேர்மன் மொழித்திறன் இல்லாமை காரணமாக, பள்ளி தொடர்பானவற்றிலே துணைசெய்ய முடியாதவர்களாக உள்ளனர்.

பெற்றோர் சேர்க்கை குறித்து நடுத்தர வகுப்பு ஒஸ்ரியப் பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில், மற்றவர்களுக்கு சம வாய்ப்புக்கு முற்றிலும் இடம் இல்லை என்பதையே இவை யாவும் உணர்த்துகின்றன. எனவே, பள்ளி அல்லது பா.மொ.க ஈடுசெய்யும் பக்கதுணையாக இதனை வழங்க முடியும் என்பது மிக இன்றியமையாதது.

ஓர் எதிர்நடவடிக்கையாக, சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண் சக ஊழியருடன் நான் தாய்மாருக்கான மிகவும் வெற்றிகரமான ஒரு கருத்திட்டத்தினைத் தொடங்கினேன். இன்றியமையாத கற்பித்தல் கருப்பொருள்களைப் பற்றிக் கலந்துரையாட ஒழுங்கு முறையான வீட்டு வருகைகள் இதில் அடங்கும். ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் பின்னர், தாய்மார்கள் மனம் திறந்து ஆவலுடன் பங்கேற்றனர். அவர்களில் இருவர் ஜேர்மன் மொழியைப் படித்தனர் அது அவர்கள் பிள்ளைகளுக்கு சிறப்பாகத் துணைசெய்ய இயலுமை தந்தது.

### பண்பாட்டுத் திறனை மேம்படுத்தல்

இந்தச் சூழலில், உள்ளூர் மசூதிகள் மற்றும் சமய சங்கங்களின் பங்கு பற்றிக் குறிப்பிட வேண்டியது முற்றிலும் கட்டாயமாகும். கடந்த 10 முதல் 15 ஆண்டுகளில் அவற்றில் பெரும்பாலானவை முதன்மையாக அரசியல் மற்றும் நிதி காரணமாக பெற்றோர்கள் மீதான செல்வாக்கை விரிவடையச் செய்துள்ளன. இது சில பெற்றோர்களை அடிப்படைவாத உலகப் பார்வைக்கு இட்டுச்சென்றது. இத்தகைய உலகப் பார்வையால், கணிசமான பிள்ளைகள் தங்கள் வகுப்புத் தோழரிடமிருந்து தூர விலகுகின்றனர். தாமாகத் திணிக்கும் தனிமைப்போக்கு சிலவேளைகளில் வலிமிகு பரிமாணங்களை எடுக்கும்.

பள்ளியின் கால்பந்து பயிற்றுவிப்பாளர் என்னும் எனது திறனில், ஓர் எதிர்நடவடிக்கையாகவும் ஒரு புதிய நிறுவன அடையாளத்தை மற்றும் புதிய பொதுவான தன்மைகளை வளர்ப்பதற்குமான கலப்பு அணிகளை நான் உருவாக்குகிறேன்.

### சனநாயகக் கல்வி

இத் தலைப்பு அனைத்து முயற்சிகளின் உச்சக் கட்டமாகும் என நான் நம்புகிறேன். பெரும்பான்மையான எல்லாச் சிக்கல்களையும் ஒரு வெற்றிகரமான சனநாயகக் கல்வியால் தீர்க்க முடியும். பெரும்பாலான பெற்றோர்கள் புலம்பெயர்வதற்கு முன்னர் எளிமையான பயிர்ச்செய்கையாளர்களாக இருந்தமையால், ஒரு சனநாயக மனப்பாங்கு அவர்களிடம் எப்போதும் இருந்ததில்லை.

சனநாயகக் கல்விக்கு நான் வகிபங்கு விளையாட்டுகளை அடிக்கடி நடைமுறைப்படுத்துகிறேன். எடுத்துக்காட்டாக (யார் முடிவுகளை எடுப்பது: ஒருவர் மட்டுமே, அல்லது ஒவ்வொரு-வரும் தம் மனத்திலிருந்து பேசவேண்டுமா? ). அல்லது ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குகள் பற்றிய விளையாட்டுகள். இவ்வாறு செய்வதில் இரு பாலினங்களும் ஒரே உரிமை உடையனவாக இருக்கவேண்டுமென்னும் பட்டறிவு பெறுகிறோம். பிள்ளைகள் இத்தகைய விளையாட்டுகளை விரும்புகின்றனர் அவை ஐயத்துக்கிடமின்றி கல்வி தொடர்பான இன்றியமையாமையைப் பெறுகின்றன.

## 2. நெக்ஸ்மியே மெஹ்மெதாய் பால் சமத்துவம், அதாவது வயது மற்றும் கல்வி நிலைகள் அடிப்படையில் மூன்று குழுக்களுக்கு பால் பொருத்தம் பற்றிய இரட்டைப் பாடவேளைக்கான பாடத்திட்டமிடல்

நெக்ஸ்மியே மெஹ்மெதாய் கொசொவோவைச் சேர்ந்தவர். அவள் 1993 முதல் சுவிற்சர்லாந்து ஜுரா மாநிலத்தில் வாழ்ந்து வருகிறார். அங்கு பா.மொ.க வகுப்புகளை நிறுவி இயக்கி வருகிறார். கூடுதலாக, அவர் கற்றல் வளங்கள் மற்றும் ஆசிரியக்கலை உண்மை எழுத்துருக்கள் ஆகியவற்றின் ஆசிரியராகவும் அமைந்துள்ளார்.

### மூன்று குழுக்களுக்கும் மேலான கருப்பொருள் மற்றும் நோக்கு:

பால் சமத்துவம் மற்றும் பால் பற்றிய வினாக்கள் (சிறுசர்களும் சிறுமிகளுக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமநிலை) பற்றிய விழிப்புணர்வு. கூடுதலாக, நிலை குறிப்பிட்ட மொழியியல் மற்றும் சமூக நோக்குகள்.

இரட்டைப் பாடத்தின் கற்கைநெறி வயது மற்றும் கல்விநிலைகளுக்கேற்ப மூன்று குழுக்களுக்கான உள்ளடக்கமும் நோக்குகளும்:

- கீழ் நிலை (வகுப்புகள் 1-3): கருப்பொருள் "பெண்களும் கால்பந்து விளையாடுகிறார்கள்" (அல்பானியன் பா.மொ.க கருவியிலிருந்து "நான் நானே மற்றும் மற்றவர்களின் நான்). ஆசிரியக்கலை நோக்குகள்: பாலினம் மற்றும் வகிபங்கு அடிப்படையிலான கருத்துகள் மற்றும் சார்புநிலைகள் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவற்றை கலந்துரையாடல். மொழியியல் நோக்குகள்: படித்தல் மற்றும் வாய்வழி வெளிப்பாட்டுத் திறன், இலக்கணம் மற்றும் சொற்றொடரியல் ஆய்வு விழிப்புணர்வு.
- இடை நிலை (வகுப்புகள் 4-6): கருப்பொருள் "எங்கள் வகுப்பில் பையன்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளும் கடமைகளும்", கலந்துரையாடலுக்கான தூண்டுதல்களுடனான பணித்தாளைப் பார்க்கவும். ஒரு மாணவனாக / மாணவியாக ஒருவரின் தன் சூழ்நிலையைப் பொறுத்தவரை மேலே உள்ள இலக்குகள்.
- மேல் நிலை (வகுப்புகள் 7-9): கருப்பொருள் "பிள்ளைகளாக மற்றும் இளையவர்களாக எங்கள் உரிமைகள்", பிள்ளைகள் உரிமைகள் குறித்த சாசனத்தின் அடிப்படையில் கலந்துரையாடல் (தேர்வுசெய்யப்பட்ட 9-12 உரிமைகள்). மேலே உள்ள இலக்குகள் எழுத்துருப் பகுப்பாய்வுக்கான அழுத்தத்துடனான மொழியியல் திறன், கருத்து உருவாக்கம் மற்றும் எழுத்து வெளிப்பாடு

சாம்பல் நிறம் = திறன், கருத்து உருவாக்கம் மற்றும் எழுத்து வெளிப்பாடு

| நேரம் | நிலை I | நிலை II | நிலை III |
|---|---|---|---|
| 10′ | அறிமுகம் நெறிப்படுத்தப்பட்ட கலந்துரையாடல்: சிறுவர்களுக்கு "குறிப்பிடத்தக்கது" என்ன, சிறுமிகளுக்குக் "குறிப்பிடத்தக்கது" என்ன; இது உண்மையா? (ஆசிரியரால் தூண்டிகள் ஏற்பாடு செய்யப்படும்) | | |
| 5′ | இடைநிலை மேல்நிலை மாணவர்களுக்கான ஒப்படைகள் பற்றிய விளக்கம் | | |
| 20′ | ஆசிரியர் "பெண்களும் கால்பந்து விளையாடுகிறார்கள்" என்னும் உரையை குழுக்களுடன் படிக்கிறார். பொருள் மற்றும் மொழி தொடர்பான ஐயங்களைத் தெளிவாக்குகிறார். | பணி தொடர்பான குழுவேலை: "எங்கள் வகுப்பின் சிறுவர்கள் சிறுமிகளது உரிமைகளும் கடமைகளும்" என்னும் பணித்தாள் பற்றிய கருத்துகளை இருவர் கொண்ட குழுக்களில் கலந்துரையாடி கருத்துகளை எழுதவும். | பணி தொடர்பான குழுவேலை:<br>1. பணித்தாளில் பட்டியலிடப்பட்ட தூண்டிகளின் அடிப்படையில் 3 பிள்ளைகளின் உரிமைகளை மூன்று குழுக்களாகக் கலந்துரையாடுக.<br>2. ஒவ்வொரு குழுவும் தாம் தேர்ந்த மூன்று உரிமைகள் பற்றி சுவரொட்டி (A3)ஆக்கி வகுப்புக்கு ஒரு சிறு எடுத்துரைப்பு நடத்தும். |
| 20′ | பணித்தாளில் பட்டியலிடப்பெற்ற தகவல்கள் சார் வினாக்களை இருவர் கொண்ட குழுக்களாகப் பிள்ளைகள் கலந்துரையாடுகின்றனர். | தகவல்களைப் படித்தலும் கலந்துரையாடலும், முடிவுகளை ஆசிரியருடன் கலந்துரையாடல். தலைப்புப்பற்றிய ஆழமான பகுப்பாய்வு: வீட்டில் யார் என்ன உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ளனர்? | |
| 10′ | இடைவேளை | | |
| 20′ | பணித்தாள் ஒப்படையைத் தொடர்க, பின்னர் ஓர் ஆக்கப் பணி (தனியாக அல்லது இருவர் இணைந்து): சிறுவர்களும் சிறுமிகளும் எதிர் பாலினம் சார்ந்த விளையாட்டுக்களை விளையாடுவதையோ அல்லது செயல்களைச் செய்வதையோ காட்டும் ஓர் ஓவியத்தினை வரைதல். | புதிய ஒப்படை<br>இது எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது / சிறுமி / சிறுவன் என்னும் பங்கு என்பது எனக்குச் சினம் ஊட்டுகிறது அல்லது "நான் ஒரு சிறுமி / சிறுவன் ஆக இல்லாவிடில்". | எடுத்துரைப்புகள் ஏற்பாடாயுள்ளனவா என்று சரி பார்த்து முடிவுசெய்க 42 உரிமைகளும் (இணைய இணைப்பு) உள்ள ஆவணத்தினை குறிப்பிட்டு, அவற்றை வீட்டிலே கற்கும்படி வேண்டுதல். |
| 5′ | சில மாணவர்கள் தங்கள் ஓவியங்களை வகுப்புக்கு அளிக்கின்றனர்* | எடுத்துரைப்புகளைக் கேட்டல் | |
| 5′ | எடுத்துரைப்புகளைக் கேட்டல் | 2-3 எழுத்துருக்கள் வகுப்புகளுக்குப் படிக்க-ப்படுகின்றன* | எடுத்துரைப்புகளைக் கேட்டல் |
| 5′ | எடுத்துரைப்புகளைக் கேட்டல் | | 1-2 குழுக்கள் தம் சுவரொட்டியை அளிக்கை செய்து கருத்துரைப்பர்* |
| 5′ | வீட்டு ஒப்படைகள் பற்றி விளக்குதல் / ஒரு பாடலுடன் நிறைவு | | |

*) தங்கள் வேலையை அளிக்கை செய்ய வரமுடியாதவர்கள் அடுத்த இரட்டை வகுப்பின் தொடக்கத்தில் ஓர் அறிமுகமாக அளிக்கை செய்யலாம்.

## 3. அரிபா மாலிக்: பல்பண்பாட்டுக் கோட்பாடு "வண்ணங்கள்" எடுத்துக்காட்டு ஊடாக ஒரு பாட வரையறை

அரிபா மாலிக் பங்காளதேஷைச் சேர்ந்தவர். அவர் இலண்டனில் வாழ்கிறார். பெங்காளி பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்கிறார்.

**இலக்குகள்**

- உள்ளடக்கம்: மாணவர்கள் (மூன்று அகவை அடிப்படையிலான குழுக்கள்) தங்கள் பிறப்பு நாட்டு (பங்களாதேஷ்) மற்றும் இங்கிலாந்துப் பண்பாட்டு வண்ணங்கள் மற்றும் வண்ண அடைச்சொற்கள் பற்றி விவரிக்கவேண்டும்.
- மொழியியலடிப்படையில்: பெங்காளி மற்றும் ஆங்கில மொழிகளின் வண்ண அடைமொழிச் சொற் களஞ்சியத்தைப் பயிற்சிசெய்க. உயர் மாணவர்களுக்கு: பெங்காளி எழுத்து வடிவத்தை மேம்படுத்தி இரு மொழிகளிலும் கலவை வண்ண அடைமொழிகள் (நீலப்பச்சை, இளஞ்சிவப்பு, முதலியன) ஆக்கத்தை ஒப்பிடுக.

**கருவிகள்**

- அட்டைகள் (குறிப்பேடு அளவு) வெவ்வேறு வண்ணங்களில் பெங்காளி வண்ண அடைமொழியுடைய அட்டைகள் ஆங்கில வண்ண அடைமொழியுடைய அட்டைகள்.
- பங்களாதேஷிலிருந்து படங்கள், அதாவது, மரபுவழி உடை, முடியுமாயின் பங்களாதேஷின் துணியின் மூலத் துண்டுகள், இங்கிலாந்திலிருந்து உடை எ.டு. வெவ்வேறு பலவண்ண உடைகளில் எலிசபெத் மகாராணியின் படங்கள் (இணையத்தில் கிடைப்பன).

செயல்முறை

| | | |
|---|---|---|
| 1. | 5′ | அறிமுகச் செயற்பாடு:<br>அனைத்து மாணவர்களும் என்முன் உள்ளனர். பிள்ளைகள் எக்குழுவில் இருப்பார்கள் என்பதை நான் தீர்மானிப்பேன். அதனுடன், என்னுடைய அளவுகோல்கள் என்னவாயிருக்கலாம் என்பதை அவர்கள் ஊகிக்கவிடப்பட்டுள்ளது.<br>(தீர்வு: அவர்களுடைய சட்டைகள் அல்லது குளிர் அங்கிகளின் வண்ணம்.) |
| 2. | 5′ | தலைப்பு மற்றும் இலக்குகள் பற்றிய தகவல். தொடங்குபவர்களுக்கு, மாணவர்கள் இரண்டு மொழிகளிலும் அவர்களுக்குத் தெரிந்த எல்லா வண்ண அடைமொழிகளைக் கூறுவர். |
| 3. | 10′ | வண்ண அட்டைகளைக் காண்பிக்கிறேன் மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் பெங்காளியில் பொருந்தும் சொல் அட்டைகளை அருகருகே வைப்பர். இதுவரை பெங்காளி எழுத்து அமைப்பினைக் அறிந்துகொள்ளாதவர்களுக்கு மூத்த மாணவர் பெங்காளி அட்டைகளை வாசித்து பின்னர் அச்சொற்களை திரும்பக் கூறுவார். |
| 4. | 25′ | கற்றல்நிலை தொடர்பான மூன்று பணிகளின் வேலை:<br>a) ஆடை (அல்லது அதன் படங்கள்) "எளிமை"யான வண்ணங்களில் (1-2 வண்ணங்கள் மட்டும், வடிவங்கள் இல்லை அல்லது எளிமையான வடிவங்கள்). பணி: வண்ணங்களின் பெயர்களைக் கூறுக, அவற்றை எழுதுக, முடியுமாயின் இரு மொழிகளிலும்.<br>b) ஆடை (அல்லது அதன் படங்கள்) மிகச் சிக்கலான வண்ணங்களும் இழைநயங்களும். பணி: மேலே போல, மிக நெருக்கமான முடியக்கூடிய விவரிப்பு.<br>c) ஆடை (அல்லது அதன் படங்கள்) இன்னும் மிகச் சிக்கலான வண்ணங்களும் இணையங்களும். பணி: மேலே போல மிக நெருக்கமான முடியக்கூடிய விவரிப்பு மற்றும், முடியுமாயின், ஒரு தனிப்பட்ட விவரணம். |
| | | இடைவேளை |
| 5. | 10′ | ஒவ்வொரு குழுவும் ஒரு சிறிய எடுத்துரைப்பினை வழங்க, மற்றவர்கள் கருத்து வழங்குவர் |
| 6. | 10′ | மொழியியல் உள்ளீடு:<br>ஆங்கிலத்திலும் பெங்காளியிலும் வண்ண நிற மாற்றங்களை எவ்வாறு வர்ணிக்கலாம் (சொல்லாக்கம், எ.டு. வெளிர் நீலம், கரு நீலம், முதலியன)? வெவ்வேறு பலவண்ண உடைகளில் எலிசபெத் மகாராணியின் படங்களைக் காட்டலாம், இரு மொழிகளிலும் நுணுக்கங்களுக்கு பெயரிடுக. |
| 7. | 10′ | "பெங்காளி பண்பாட்டிலும் ஆங்கிலப் பண்பாட்டிலும் வண்ணங்கள்" பற்றிய கலந்துரையாடல் / வகுப்பு உரையாடல். முதலில், 4 கலப்பு அகவைக் குழுக்களில் ஏற்பாடும் கலந்துரையாடலும்:<br>a) பங்களாதேஷிலும் இங்கிலாந்திலும் இயற்கையின் மாதிரி எடுத்துக்காட்டான வண்ணங்கள் எவை?<br>b) பங்களாதேஷிலும் இங்கிலாந்திலும் உள்ள நகரங்களின் மாதிரி எடுத்துக்காட்டான வண்ணங்கள் யாவை?<br>c) பங்களாதேஷிலும் இங்கிலாந்திலும் பொதுவாக மேலோங்கிய வண்ணங்கள் யாவை?<br>d) பங்களாதேஷையும் இங்கிலாந்தையும் நினைக்கும்போது எந்த வண்ணங்கள் உங்கள் மனநிலையை உருக்காட்டும். |
| 8. | 15′ | நான்கு தலைப்புகள் பற்றிய கலந்துரையாடல் / வகுப்பு உரையாடல். பாடம் நிறைவு. |